உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
அருள்மிகு மங்கை பாகர் துணை

இருபத்தைந்து சிவ மூர்த்தங்களும் விளக்கமும்

சிவஸ்ரீ ஈசான தேசிகர் அவர்கள்

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்
உ
சிவமயம்
தமிழகச் சைவ நெறிக் கழகம்

மணமகன் : R.கணேஷ் B.B.A., M.H.M., M.B.A.

மணமகள் : S.தென்றல் விசாலாட்சி B.Sc., (Comp.Sc)

திருமண வெளியீடு
திருமண நாள் : சுபானு ஆனி.26
10-7-2003 வியாழக்கிழமை



அருள்மிகு. தேனிற்பொலிமொழியாள்
உடனாகிய மங்கைபாகர்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
அருள்மிகு மங்கை பாகர் துணை

இருபத்தைந்து சிவ மூர்த்தங்களும் விளக்கமும்

சிவஸ்ரீ ஈசான தேசிகர் அவர்கள்

மணமகன் : R.கணேஷ் B.B.A., M.H.M., M.B.A.
மணமகள் : S.தென்றல் விசாலாட்சி B.Sc., (Comp.Sc)

திருமண வெளியீடு

திருமண நாள் : சுபானு ஆனி.26
10-7-2003 வியாழக்கிழமை

உ
சிவமயம்
ஸ்ரீ மங்கை பாகர் துணை

இமைப்பொழுதும் என்நெஞ்சில்
நீங்காதான் தாள் வாழ்க.

பதிப்புரை



ஈன்றாளுமாய் எந்தையுமாய் உடன் தோன்றினராய் என்னும் தேவாரப் பாடலுக்கு இணங்க என் தாய், தந்தை குருநாதரை வணங்கி இந்நூலை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இம்மலரில் ஆசியுரை வழங்கிச் சிவபெருமானுடைய இருபத்தைந்து மூர்த்தங்களையும் அவற்றுக்குரிய விளக்கங்களையும் தந்து, வெளியிட நம் குருநாதர் வழித்தோன்றல் சிவஸ்ரீ ஈசான தேசிகர் அவர்கள் செய்த உதவி மிகவும் போற்றுதற்குஉரியது. இந்நூலை வடிவமைத்துக் கொடுத்த டாக்டர் ந.மாணிக்க ஐயா அவர்களுக்கும் நல்ல படியாகக் குறுகிய காலத்தில் அச்சிட்டுத் தந்த விஜயா பிரிண்டர்ஸ் உரிமையாளருக்கும் நன்றி.

1942-ல், பிறந்த என்னை 8 வயதில் என்தாய் மறைந்தாலும் ஆளாக்கிய 4 மூத்த சகோதரிகளுக்கும் 2 மூத்த சகோதரர்களுக்கும் நன்றி. 1962-ல் ஆசிரியர் பயிற்சியில் சேர்ந்து 1972ல் குழந்தைப்பேறு அடைந்து 1982ல் சைவநெறியில் வந்து 2002ல் மணிவிழாக்கண்டு இந்நாளில் ஏவா மக்கள் மூவா மருந்து என்பதற்கு இணங்க மூன்று குழந்தைகளும் அடியேனின் குறிப்பு அறிந்து நடந்து இன்று இளையவன் கணேஷ் திருமண வெளியீடாக இந்நூல் வருவதில் இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

குடத்தில் இருந்த விளக்காய் இருந்தவன். எப்படியெனில் வெள்ளலூர் ந.மு.செ.நல்லகருப்பன் செட்டியார் வகையில் பாண்டவர்

 2-b

ஐவர் என்ற ஐந்து வீட்டாரில் சோமசுந்தரம் செட்டியார் மகனாய்ப் பிறந்தேன். வெள்ளலூர் நாட்டில் ஆசிரியர் பணியில் 37 ஆண்டுகளாக நற்பெயர் பெற்றேன். பணி ஆற்றும் போது தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியில் மேலூர் வட்டாரப் பொருளாளராகப் பொறுப்புக்கொடுத்து மறியல் போராட்டத்தில் கலந்து கொள்ளச் செய்து சென்னை மத்தியச் சிறையில் 26 நாட்கள் இருக்க வைத்தும் சென்னைக்குச் சைக்கிள் பேரணி செல்லவைத்தும் மும்பை, பாட்னா மாநாடுகளில் கலந்து கொள்ளச் செய்தும் பெருமை சேர்த்த கூட்டணித் தலைவர் மறைந்த அண்ணன் J.S.இராசு அவர்களால் வட்டார விளக்காய் இருந்தேன். இவைகளை விட மணிமகுடமாக அடியேனைக் குடத்தில் இருந்த விளக்கைக்குன்றத்தின் மீது ஏற்றிய விளக்காய் மீனாட்சி மிஷன் மருத்துவ மனையில் அறங்காவலராக (டிரஸ்டி) ஆக்கித் தென்மாவட்டங்களில் அனைவரையும் அறிமுகமாக்கிச் சேவை செய்யப்பெருமைப்படுத்திய சிறப்பு என் பால்ய நண்பரான Dr.N.சேதுராமனையும் Dr.ராஜம் சேதுராமனையும் சேரும். இதனைச் சிந்தையில் கொண்டு என் மூத்த மகன் கண்ணா மகனுக்கு "ரகுராமன்" என்ற பெயரைச்சூட்டியுள்ளேன்.

அடியேனின் சிறப்புக்குக் காரணம் ந.மு.செ.ந என்ற வழித்தோன்றலாய் இருப்பதாலும் என் தாய்வழி பதினாலூர் நாட்டாண்மை மரபினாலும் அமைந்துள்ளது. என் மனைவியும், வரும் மருமகள் தென்றல் விசாலாட்சியும் மேற்படிவகையினரே.

"உன் நண்பனைச் சொல் நீயாரென்று சொல்லி விடுகிறேன்" என்ற ஆங்கிலப் பழமொழிக்கு இணங்க என் நண்பர்கள் Dr.N.சேதுராமன்-அண்ணன் மாயாண்டி (நெல்லையில் காண்ராக்டர்) வழக்கறிஞர் N.S.பொன்னையா, மில்ட்ரி வீரணன், பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்த S.பிரதாபன், இடையர் கோவில்பட்டி. சு.பெரி-கிருஷ்ணன், முத்துராமன். மேலூர் S.R.கிருஷ்ணன் போன்றவர்களாவர், இவர்கள் நட்பு என்னை உயர்த்த முக்கியக் காரணமாகும்.

ஈதல் அறம். தீவினை விட்டு ஈட்டல் பொருள். எங்கள் குடும்பத்தார் விட்டுச் சென்ற பசுமடத்தைப் பராமரித்து மீண்டும் பாலாபிஷேகம் பிரான்மலை ஸ்ரீ வயிரவமூர்த்திக்குச் செய்து வருவதால் ஈதல் அறம் பேணும் பேறுகிடைத்துள்ளது. தீவினை விட்டு ஈட்டல் பொருள் என்பதற்கு வழி வகுத்துக் கொடுத்தவர்கள் தெய்வத்திரு ந.மு.மு.இராமநாதன் செட்டியார் அவர்களும் பூலாங் குறிச்சி ராம.வி. குடும்பத்தாரும் ஆவார். இவற்றினும் மேலாக என் உடன் பிறந்த அண்ணன் நடராஜன் முத்தையா ஆகிய இருவர் தம்பி நவநீதன் இவர்களின் ஒற்றுமையால் நல்ல குடும்பம் பல்கலைக் கழகமாக வாழ்கிறோம்.

ஆன்மீகத்தில் குருநாதராகச் சிவபெருமானே சிவஸ்ரீ தத்புருஷதேசிகர் ஐயாவாக எழுந்து அருளி எங்கள் குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் சமய விசேட நிர்வாண தீட்சைகளைச் செய்து உள்ளார்கள். யான் பெற்ற இன்பம் அனைவரும் அடைய அடியேனின் ஆன்ம நாயகனாகிய பிரான்மலையில் உள்ள தேனிற் பொலி மொழியாள் உடனாகிய கொடுங்குன்ற நாதரை வணங்கி எண்ணிய எண்ணியாங்கு எய்தி இன்பம் எய்தும் பொருட்டுச் சைவப் பெருமக்களையும் உறவினர்களையும் நண்பர்களையும் வேண்டி வணங்குகின்றேன்.

தங்கள் அன்புள்ள
சிவநெறித் தொண்டர். S.இரகுநாதன்

அவ்வண்ணமே
வணங்கி மகிழும்
சிவநெறிச் செல்வி R.உமா தேவி
Er.R.கண்ணா-கனிமொழி
செல்வன் ரகுராமன்
R.கணேஷ் -தென்றல் விசாலாட்சி
S.பிரியா சரவணன்
செல்வன். ரிஷிகேஸ்வரன்

2 தத்புருஷ நிலையம்
S.கொடிக்குளம், K.புதூர்
மதுரை-7.
10-6-2003

2-6

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்



'சைவசித்தாந்த சரபம்'
சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் ஐயா அவர்கள்

சித்தாந்த சைவ சரபமாய்ச் செம்பொருள் கண்டுணர்த்தும்
வித்தகம் பத்திமை மேவி யருளும் குருமுதல்வர்
முத்தி நெறிக்கண் முனைவிக்கும் ஞான விழுப்பொருளாம்
தத்பு ருடதே சிகர்திருத் தாள்சூடி உய்குவமே.

- ந. மாணிக்கம்



உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சிவஸ்ரீ ஈசானதேசிகர்
வயிநாகரம்
இராம. சொக்கலிங்கம்
பாலறாவாயர் நிலையம்
5,சம்பந்தர் தெரு, தேவகோட்டை-630 302.

ஆசியுரை

10-7-03

பரமகருணாநிதியாகிய சிவபெருமான் இந்நிலவுலகத்திலுள்ள உயிர்கள் உய்யும் பொருட்டுப் பல்வேறு வடிவங்களைத் தாங்கிவந்து ஆட்கொள்கின்றார். அங்ஙனம் ஆட்கொள்ளும் வடிவங்கள் நம் தகுதிக்கேற்ப முத்திறப்படுகின்றன. அவை போக வடிவம், யோக வடிவம், வேக வடிவம் என்பனவாம். இவை 64 என வகைப்படுத்திக் கூறப்படுகின்றன. 64ல் 25 மூர்த்தங்கள், திருவுருவப் படத்துடனும் திருவுருவ-திருவவதார விளக்கங்களுடனும் வழிபாட்டுப் பயனுடனும் இன்று நூல் வடிவில் வெளிவருகின்றன .

இந்நூலைச் சிவநெறித் தொண்டர் திரு.இரகுநாதன்-உமாதேவி தம்பதியர் தம் இளைய மகன் செல்வன் R.கணேஷ் BBA., MHM., MBA., திருமண வெளியீடாக வெளியிடச் செய்கிறார்கள். பதி புண்ணியத்தைச் செய்து வரும் அன்பர் இரகுநாதன் குருபக்தி நிரம்பக் கொண்டவர். அவரது பணி சிறக்க வாழ்த்துக்கள்.

மணமக்கள் செல்வன் கணேஷ்-செல்வி தென்றல் விசாலாட்சி நன் மக்கட்பேறு முதலிய எல்லாச் செல்வங்களுடனும் இனிது வாழ நமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ மீனாட்சி அம்மை உடனாகிய சொக்கலிங்கப் பெருமானின் திருவடிகளை வணங்கி வாழ்த்துகின்றோம்.

நலமே தழைக.

சிவக்கொழுந்து கணேசிற்கு

டாக்டர். சேதுராமனின் வாழ்த்து....!



எனது பால்ய நண்பர், எங்கள் மீனாட்சி மிஷன் மருத்துவமனையின் அறங்காவலர்களில் ஒருவர், சைவப்பழம், சிவநெறிச் செல்வர், இந்த நூற்றாண்டின் இன்னொரு நாயன்மாராகத்திகழ்பவர் ஆசிரியர் இரகுநாதன் அவர்கள்.

ஆசிரியர் இரகுநாதனின் அன்பு மகன், எங்கள் மருத்துவ மனையின் பண்டகத்துறையின்(மெட்டீரியல்) மேலாளராகத் திறம்படப் பணியாற்றும் தம்பி கணேசின் மணவிழாக் கண்டு மனம் பூரிக்கிறது.

தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே...

என்ற சைவ தத்துவத்தின் சாற்றினை நித்தமும் அருந்தும் சிவக்குடும்பத்தில் பிறந்தவர் தம்பி கணேஷ்.

''நீறில்லா நெற்றிபாழ்'' என்பது போல் எப்போதும் சிவச்சின்னத்துடன் திகழ்பவர். அந்த விபூதியின் நிறம் போல மனதும் கொண்டவர்.

எங்கள் மருத்துவமனையின் விசுவாசம் மிக்க தொண்டர் படையில் முன்னணியில் நிற்பவர்.

தான் கொண்ட சிவநெறியில் வழுவாது வாழ்வதுபோல், தான் பணிபுரியும் துறையிலும் வழுவாமல் அதன் மேம்பாட்டில், வளர்ச்சியில், தன்னை அர்ப்பணிப்பவர்.

எங்களின் மனித நேயமிக்க மருத்துவப் பணிக்கு எந்த நேரத்திலும் இடர் வந்தால் வன்தொண்டனாகி இடர்களைய முயல்பவர்.

சிவனடியாருக்காகப் பிள்ளையையே அறுத்து விருந்தளித்த சிறுத்தொண்டர் போல் இந்தச் சேதுராமனுக்காக எதையும் செய்ய

எத்தனிக்கும் இந்த நூற்றாண்டின் சிறுத்தொண்டர்.

இத்தனை பெருமைக்கும் அருமைக்கும் சொந்தக்காரர்தான் அருமை நண்பர். இரகுநாதனின் அன்புமகன் கணேஷ் அவர்கள்.

இனிய மணக்கோலம் காணும் இந்த இளைய மணமகனை வாழ்த்துவது என் மகனை யானே உச்சிமோந்து வாழ்த்துவது போன்ற பேரின்பம் அளிக்கிறது.

திருவாசகத் தேன்
தேவாரப் பண்
திருமந்திரச் சாறு
திருக்குறளின் நெறி

இவைகள் பின்னிப்பிணைந்த இந்தச் சிவக் குடும்பத்தின் இளைய விழுதான தம்பி கணேஷ் அவர்கள்

சக்தியும் சிவனுமாய்ச்
சமயமும் நெறியுமாய்ப்
பக்தியும் பயனுமாய்ப்
பதிகமும் பொருளுமாய்

வையகம் போற்ற வாழ்வாங்கு வாழ எங்கள் குடும்பத்தின் சார்பாக வாழ்த்துகிறேன்.

வாழ்த்துக்களுடன்

டாக்டர். ந.சேதுராமன்
நிறுவனத் தலைவர்

Dr.ராஜம் சேதுராமன் MBBS.,
செயல் இயக்குநர்

மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும்
ஆராய்ச்சி மையம்,
மதுரை.

நாள் : 6-6-03
இடம் : மதுரை

உ
சிவமயம்

அணிந்துரை

டாக்டர். ந.மாணிக்கம்



இருபத்தைந்து சிவமூர்த்தங்களும் விளக்கமும் என்னும் இந்த மங்கல நூல், "கணேஷ்-தென்றல் விசாலாட்சி" திருமண வெளியீடாக வெளிவந்துள்ளது. சிவஸ்ரீ ஈசான தேசிகர் அவர்கள் அரிதின் முயன்று மூர்த்தங்களுக்குரிய படங்களைத் தொகுத்தும் திருவுருவவிளக்கம், திருவவதார விளக்கம், வழிபாட்டுப் பயன் என்று பாகுபடுத்திச் செறிவான விளக்கங்கள் தந்தும் அருளியுள்ளார்கள்.

சிவலிங்கத்தினின்றும் தோன்றிய சிவ வடிவங்கள் ஆகமங்களில் 64 என்று கூறப்படுகின்றன. அவை வருமாறு.

1. இலிங்கம் 2. இலிங்கோற்பவம், 3.முகலிங்கம், 4. சதாசிவம், 5. மகாசதாசிவம், 6. உமாமகேசம், 7. சோமாஸ்கந்தம், 8.சுகாசனம், 9.உமேசம், 10.சந்திரசேகரம், 11.விருஷபாரூடம், 12. ருஷபாந்திகம், 13. புஜங்கலளிதம், 14 புஜங்கத்திராசம், 15. சந்தியா நிருத்தம், 16.சதாநிருத்தம், 17.காளிதாண்டவம், 18.கங்காதரம், 19.கங்கா விசர்ச்சனம், 20 திரிபுராந்தகம், 21. கல்யாணசுந்தரம், 22.அர்த்தநாரீசம், 23.கஜயுத்தம், 24. சுவராபக்னம், 25.சரார்த்தூலஹரிபாசுபதம், 26. கங்காளம் 27.கேசவார்த்தம், 28.பிட்சாடனம், 29. சிம்மக்னம், 30. சண்டேசானுக்கிரகம், 31.தட்சிணாமூர்த்தம், 32. வீணாதட்சிணாமூர்த்தம், 33.காலாந்தகம், 34.காமாரி, 35.லகுளேசம், 36.பைரவம், 37.ஆபதோத்தாரம், 38.வடுகம், 39.சேத்ரபாலம், 40.வீரபத்திரம், 41.அகோரஸ்தரம், 42.தட்சயக்ஞஹதம், 43.கிராதம், 44.குருமூர்த்தம், 45.அச்வாரூடம், 46.கஜாந்திகம், 47. ஜலந்தரவதம், 48.ஏகபாததிரிமூர்த்தம், 49.திரிமூர்த்தம், 45.திரிபாதம், 51.ஏகபாதமூர்த்தம், 52.கௌரிவரப்ரதம், 53.சக்ரதான சொரூபம், 54.கௌரிலீலாசமன்விதம், 55.விஷாபகரணம், 56.கருடாந்திகம், 57.பிரம்ம சிரச்சேதம், 58.கூர்மசம்ஹாரம், 59.மச்சாரி, 60.வராகாரி, 61.பிரார்த்தனாமூர்த்தம், 62.இரக்தபிட்சாப்ரதானம், 63.சிஷ்யபாவம், 64.நீலகண்டம்.

இவற்றின் சுருக்கமாகக் காரணாகமத்தில் 25 மூர்த்தங்கள்

கொள்ளப்படுகின்றன. இவற்றுள்ளும் ஒரு சில மூர்த்தங்கள் வேறு பாட்டுடனும் முன்பின்னாகவும் தொகுத்துக் கூறப்படுதலும் உண்டு .

மதுரை மீனாட்சி அம்மை திருக்கோவிலில் சுவாமி சந்நிதிக் கம்பத்தடி மண்டபத்தில் உள்ள எட்டுப் பெரிய தூண்களில் 25 சிவ மூர்த்தங்கள் அழுகுறக்காணப்பெறுகின்றன. அமராவதிபுதூர் வயிநாகரம் குடும்பத்தார்களின் திருப்பணியாக இவை திகழ்தல் குறிக்கத்தக்கதாகும்.

ஆசாரியராவார் சீடரது பக்குவம் நோக்கி அவர்மனத்தைக் கசிவித்துத் தமது சக்தியை அவர் மாட்டுச் செறிவித்து அவர்க்கு ஞானம் உதிப்பிக்கும் ஆற்றல் உள்ளவராய் மனக்குற்றம் உடற்குற்றம் இரண்டும் இல்லாதவராய் முப்பொருள் ஞானம் உடையவராய் இருத்தல் வேண்டும். சீடரும் குருவினது குணத்தையே கொண்டு,

தந்தைதா யாவானும் சார்கதியிங் காவானும்
அந்தமிலா இன்பநமக் காவானும் - எந்தனுயிர்
தானாகு வானும் சரணாகு வானுமருட்
கோனாகு வானும் குரு.

என்று தெளிந்து குருவைப் போற்றிப் பூசித்து அவர் உபதேசித்தவாறே மந்திரக் கிரியா பாவனைகளை நுணுகத் தெரிந்து உச்சரித்துச் சாதித்துப் பாவித்து நிட்டைமுயலல் வேண்டும்.

இவ்வனுபவங்களுக்குச் சிவமூர்த்தங்கள் தொடர்பான இந்நூல் துணை செய்யும் என்பதில் ஐயமில்லை. சைவர்கள் யாவரும் நூற்பயன் பெறுவார்களாக. திரு.இரகுநாதன், செல்வன்.கணேஷ் பெருமையும், சிறப்பும், தகுதியும், தொண்டும் புலப்படுத்தும் கருவியாகவும் இந்நூல் திகழ்கிறது.

மணமக்கள் திருவருள், குருவருள் நிரம்பப் பெற்று எல்லா நலனும் எய்தி இனிது வாழ வாழ்த்தி இறைவனை இறைஞ்சுகின்றேன்,

செல்வன் கணேசன்நல் தென்றல் விசாலாட்சி
நல்ல மணமக்கள் நற்றமிழ்போல் தொல்லுலகம்
பாராட்ட வாழ்ந்திடுக பல்வளமும் பெற்றுயர்க
சீரார் சிவனருளால் சேர்ந்து.

10-7-2003 ந.மாணிக்கம்

உ
சிவமயம்
பாலறாவாயர் துணை

இருபத்தைந்து சிவமூர்த்தங்களும் விளக்கமும்

சிவஸ்ரீ ஈசான தேசிகர் அவர்கள்

(வயிநாகரம். இராம.சொக்கலிங்கம்)
தேவகோட்டை

சிவன் என்ற சொல்லுக்கு மங்கலவடிவினன் என்பது பொருள். தானும் மங்கல வடிவோடு விளங்கித் தன்னை வழிபடும் அடியவர்களையும் மங்கலத்துக்கு உரியவர்களாகச் செய்பவர் சிவபெருமான் ஒருவரே,

சிவாலயத்துள் சிவலிங்கம் அருவுருவத் திருமேனியாகவும் சிவபெருமான் கொண்டருளிய பல்வேறு வடிவங்கள் உருவத் திருமேனிகளாகவும் விளங்குகின்றன.

சிவபெருமான் பல்வேறு சமயங்களில் உருவத்திருமேனி கொண்டு எழுந்தருளிய வடிவங்களை 64 என வகைப்படுத்தியும் அவற்றையும் சுருக்கி 25 மூர்த்தங்கள் எனத் தொகைப்படுத்தியும் கூறுவர்.

சிவமூர்த்தங்கள் 25

1.சந்திரசேகரர், 2.உமாமகேசர், 3.இடபாரூடர், 4.சதாநிருத்தர்(நடராஜர்), 5.கல்யாணசுந்தரர், 6.பிட்சாடனர், 7.காமதகனர், 8.காலாந்தகர், (காலசம்ஹாரமூர்த்தி), 9.திரிபுராந்தகர், 10.சலந்தரவதர், 11.கஜயுத்தர், 12.தட்சயக்ஞஹதர்(வீரபத்திரர்), 13.நீலகண்டர் (விஷாபகரணர்), 14.அர்த்தநாரீஸ்வரர், 15.கிராதர், 16.கங்காளர், 17.சண்டேச அனுக்கிரகமூர்த்தி, 18.பைரவர், 19.சக்ரதானர், 20.கஜமுகானுக்கிரகர், 21.சோமாஸ்கந்தர், 22.ஏகபாதர், 23.சுகாசனர், 24.இலிங்கோத்பவர், 25.தட்சிணாமூர்த்தி

1.ஸ்ரீ சந்திரசேகரர்



1.ஸ்ரீ சந்திரசேகரர்

திருவுருவ விளக்கம்: மானையும் மழுவையும் அபயவரத ஹஸ்தத்தையும் கொண்டு பத்மபீடத்தில் சமமாகப் பாதங்களை வைத்து, நின்ற கோலத்தில் உமையம்மையுடன் திகழ்பவர் "சந்திரசேகரர்".

திருவவதார விளக்கம்: சந்திரன் தட்சனுடைய சாபத்திற்கு அஞ்சிச் சிவபெருமானிடம் சரண் அடைந்தான். சந்திரனைத் தன் சடையிலிட்டு அவனது பயத்தைப் போக்கி அருளிய கோலமே "சந்திரசேகரமூர்த்தி" ஆகும்.

வழிபாட்டுப்பயன்: பவசாகர நீக்கம் பெறுவர்

2. ஸ்ரீ உமா மகேசமூர்த்தி



2. ஸ்ரீ உமா மகேசமூர்த்தி

திருவுருவ விளக்கம்: சுகாசனத்தில் உமையம்மையை அணைத்தபடி அட்சமாலை, சூலம், அபயம், வரதம் கொண்ட நாற்கரங்களுடன் அமர்ந்து இருக்கின்ற கோலத்தில் திகழ்பவர் "உமாமகேசமூர்த்தி".

திருவவதார விளக்கம்: உமையைத் திருமணம் கொள்ளுமுன் அவரது தவநிலை தெரிவிக்க விருத்தராகச் சென்று தம்மை மணக்க வேண்டி அவரது கலங்காநிலை உணர்த்திப்பின் தம் உருக்காட்டிச் சத்தருஷிகளால் மணம் பேசுவித்துத் திருமணம் கொண்டு அருளிய கோலமே "உமாமகேசமூர்த்தி" ஆகும்.

வழிபாட்டுப்பயன்: வேகத்தைத் தடுத்துத் திருமண விருப்பை உதவுவார்.

3. ஸ்ரீ இடபாரூட மூர்த்தி



3. ஸ்ரீ இடபாரூட மூர்த்தி

திருவுருவ விளக்கம்: ரிஷபவாகனத்தில் உமாதேவியுடன் எழுந்தருளியுள்ள சிவ பெருமான் விரிந்த சடைமேல் கங்கையையும் சந்திரனையும் கொண்டு, முக்கண்ணுடன் தனது நாற்கரத்தில் உடுக்கை, மான், அபயவரதஹஸ்தங்களையும் தாங்கித்திருவருள் புரிகின்ற கோலத்தில் திகழ்பவர் "இடபாரூடமூர்த்தி".

திருவவதார விளக்கம் : சர்வசம்மார காலத்து இடபவுருக் கொண்டு தம்மையடைந்த தருமத்தை அதன் வேண்டுகோளின் படி வாகனமாக ஏற்று அருளிய கோலமே "இடபாரூடமூர்த்தி" ஆகும்.

வழிபாட்டுப்பயன்: வேண்டியவற்றைக் கருணை செய்து அருளுபவர்.

4.ஸ்ரீ சதாநிருத்தமூர்த்தி
(நடராஜர்)



4.ஸ்ரீ சதாநிருத்தமூர்த்தி (நடராஜர்)

திருவுருவவிளக்கம்: விரிந்த சடையும், சந்திரனையும் கங்கையையும் தாங்கிய ஜடாமகுடமும், முக்கண்ணும், உடுக்கை, ஜ்வாலாக்னி, அபயவரதஹஸ்தங்களும் கொண்டவர். முயலகன் சரீரத்தில் வலது திருவடியை ஊன்றியும் இடது திருவடியைத் தூக்கியும் உமையம்மை, பதஞ்சலி, வியாக்ரபாத முனிவர்கள் கண்டுகளிக்கும் வகையில் என்றும் நடனம் புரியும் கோலத்தில் திகழ்பவர் "சதாநிருத்தமூர்த்தி".

திருவவதாரவிளக்கம்: உயிர்களைப் பந்தித்துள்ள பாசங்களைப் போக்கி, உயிர்கட்கு முத்தி அருளுதற் பொருட்டு அருள் வடிவான அம்பிகை அருகில் இருந்து அத்திருநடனத்தைக் கண்டு மகிழும்படியும், பதஞ்சலி, வியாக்கிரபாத முனிவர்களுக்கு முன்பு அருளிய படியும் என்றும் திருநடனம் செய்து அருளிய கோலமே "சதாநிருத்த மூர்த்தி"ஆகும்.

வழிபாட்டுப் பயன் : சிவானந்தப்பேறுகிட்டும்.

5. ஸ்ரீ கல்யாணசுந்தரமூர்த்தி



5. ஸ்ரீ கல்யாணசுந்தரமூர்த்தி

திருவுருவவிளக்கம்: திருமண மண்டபத்தில் சிவமூர்த்தி கல்யாணக் கோலத்தில் சுந்தரரூபத்துடன் பார்வதி அம்மையைத் திருக்கரம்பற்றும் திருக்கோலத்தில் திகழ்பவரே "கல்யாணசுந்தரர்".

திருவவதாரவிளக்கம்: தட்சனிடம் அவதரித்த தாட்சாயணி என்னும் பெயர் நீங்க மலையரசன் தவத்தால் மகளாகத் திருவவதரித்து அவனிடம் வளர்ந்து சிவமூர்த்தியை மணக்கத் தவம் செய்கிறாள் பார்வதிதேவி. அவளை மணக்கப் பெருமான் கொண்ட கோலமே "கல்யாணசுந்தரர்" ஆகும்.

வழிபாட்டுப்பயன் : மங்கலம் உண்டாகும். திருமணத்தை முடித்தருள்வார்.

6.ஸ்ரீ பிட்சாடனமூர்த்தி



6.ஸ்ரீ பிட்சாடனமூர்த்தி

திருவுருவவிளக்கம்: கங்கை சந்திரனைத்தன் ஜடாமகுடத்தில் தரித்தவரும் முக்கண் உடையவரும் வலது இடது கைகளில் சூலத்தை ஏந்தியவரும் வலது கீழ்க்கையில் அறுகும் அதன் கீழ்ப்பாகத்தில் நிற்கின்றமானும் உடையவராய் இடது கீழ்க்கையில் பிட்சாபாத்திரம் கொண்டு பெருத்த வயிறுடன் திகழ்பவர் "பிட்சாடனர்".

திருவவதாரவிளக்கம்:தாருகாவனத்து முனிவர்களுக்கு அறிவு புகட்டுதற்பொருட்டுப் பெருமான் மேற்கொண்ட திருக்கோலமே "பிட்சாடனர்" ஆகும்.

வழிபாட்டுப்பயன்: பரிபாகமுள்ள ஆன்மாக்களுக்குப் போகசங்கிரகம் உண்டு பண்ணும்.

7. ஸ்ரீ காமதகனமூர்த்தி



7. ஸ்ரீ காமதகனமூர்த்தி

திருவுருவவிளக்கம்: விரிந்த சடையுடனும் ஜடாமகுடத்தில் சந்திரனைத் தாங்கியும் வலது மேற்கரத்தில் உடுக்கையையும் இடது மேற்கரத்தில் மானையும் கொண்டு வீராசனத்தில் இருந்து மடியில் இடது கைமேல் வலது கையை வைத்தபடி யோகத்தில் அமர்ந்து திகழ்பவரே "காமதகனமூர்த்தி". அருகில் இரதி மன்மதன் தம்பதியர்,

திருவவதாரவிளக்கம்: மன்மதன் தேவர் வேண்டுகோளால் சிவபெருமான் யோகத்திருக்கையில் புஷ்பபாணத்தையேவியதால் அவனைத் தனது நெற்றிக்கண்ணால் தகனம் செய்தார். பின் இரதிதேவி பெருமானிடம் புருஷபிட்சை வேண்டித் துதிக்க அவள் கண்ணுக்குமட்டும் உருவம் உடையவனாக அருளிச் செய்தார்.

இவ்வேளையில் மேற்கொண்ட திருக்கோலமே "காமதகனமூர்த்தி" ஆகும்.

வழிபாட்டுப் பயன் : ஆன்மாக்களுக்கு மன்மத பீடை நீங்கும். மெய்ஞ்ஞானம் தோன்றும்.

8. ஸ்ரீ காலாந்தகமூர்த்தி (காலசம்ஹாரர்)




8. ஸ்ரீ காலாந்தகமூர்த்தி (காலசம்ஹாரர்)

திருவுருவவிளக்கம்: விரிந்த சடை, ஜடாமகுடத்தில் கங்கை சந்திரன், முக்கண், சூலம் ஏந்திய இருகைகளும் மற்ற கரங்களில் உடுக்கை, அம்பு, சர்ப்பம், பாசம், வில், வாள் ஆகியவற்றை ஏந்தியும் இடது காலால் யமனைச்சம்ஹாரம் செய்பவராகத் திகழ்பவர் காலாந்தக மூர்த்தி. அருகில் மார்க்கண்டேயர், பெருமானை அணைத்தபடி உள்ளார்.

திருவவதாரவிளக்கம் : மார்க்கண்டேயருக்காக யமனை உதைத்தருளிய மூர்த்தி, இவர் மார்க்கண்டேயர் என்றும் சிரஞ்சீவியாய் வாழும் வரத்தை நல்கியதோடு பூமாதேவியின் விண்ணப்பத்தை ஏற்று யமனை எழுப்பி அருள் புரிந்த போது மேற்கொண்டகோலம் "காலாந்தக மூர்த்தி" ஆகும்.

வழிபாட்டுப்பயன்: காலபயம் நிவர்த்தி ஆகும்.

9. ஸ்ரீ திரிபுராந்தகமூர்த்தி



9. ஸ்ரீ திரிபுராந்தகமூர்த்தி

திருவுருவவிளக்கம்: தேவர்களால் நிர்மாணிக்கப்பட்ட திருத்தேரில் முப்புரங்களையும் எரிக்கச் சிவபெருமான் உடுக்கை, அம்பு, மான், வேல் முதலியவற்றைத் தாங்கிப் புன்சிரிப்புடன் எழுந்தருளியுள்ளவராகத் திகழ்கிறார்.

திருவவதாரவிளக்கம்: பிரமனை நோக்கித் தவம் இருந்து தாரகாசுரனின் மைந்தர்களாகிய தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி ஆகிய மூவரும் பொன் - வெள்ளி - இரும்புக் கோட்டைகளைப் பெற்று அக்கோட்டைகளுடன் பறந்து தேவர்களை வருத்தினர். இதனால் தேவர்கள் சிவபெருமானை வேண்டப் பெருமான் முப்புரங்களையும் தனது சிறியதொரு சிரிப்பாலேயே பொடியாக்கித் தேவர்களைக் காத்து அருளினார். இவ்வேளையில் கொண்ட கோலமே "திரிபுராந்தக மூர்த்தி" ஆகும்.

வழிபாட்டுப்பயன்: மாறுபட்ட ஆன்மாக்களை வசப்படுத்தும். முக்குணங்களையும் மாற்றுவார்.

10. ஸ்ரீ சலந்தரவதமூர்த்தி



10. ஸ்ரீ சலந்தரவதமூர்த்தி

திருவுருவவிளக்கம்: சிவந்தநிறம், வேகமான நடை, முக்கண், இருகரம், விருத்தராய்க் கொண்ட கோலத்துடன் திகழ்பவர் சலந்தரவதமூர்த்தி.

திருவவதாரவிளக்கம்: ஒரு சமயம் இந்திரனால் கோபம் அடைந்த சிவபெருமான் உருத்திரவடிவு எடுத்தார். அதனைக் கண்ட இந்திரன் பெருமானிடம் தன் பிழையைப் பொறுத்தருள வேண்டப்பின் சிவபெருமான் தன் கோபத்தைக் கடலில் விட்டார். அது குழந்தையுருவாகிக் கடல் அரசனால் சலந்தரன் எனப் பெயரிடப்பட்டு வளர்க்கப்பட்டது. அச்சலந்தரன் பின்நாளில் சிவபெருமானையே எதிர்க்கப் புறப்பட்டான். அவனுக்குப் புத்தி புகட்டப் பெருமான் வேதியராய் அவன்முன் சென்று நிலத்தில் காலால் வட்டம் கீறி அதைப் பேர்த்து எடுக்கச் செய்ய அதுவே சக்கரமாக அவன் தலையைக் கொய்தது. இவ்வேளையில் அவர் கொண்ட கோலமே "சலந்தரவத மூர்த்தி" ஆகும்.

வழிபாட்டுப்பயன்: கோபம் நீங்கும்.

11. ஸ்ரீ கஜயுத்தமூர்த்தி



11. ஸ்ரீ கஜயுத்தமூர்த்தி

திருவுருவவிளக்கம்: யானையின் தலையில் திருவடியை ஊன்றியவரும், இரண்டு கைகளால் விரிக்கப்பட்ட யானைத் தோலை உடையவரும், மேலே இருக்கின்ற யானையின் வாலை உடையவரும் கங்கை-சந்திரனைத் தாங்கியவரும் தந்தம் வாள், கதை, சூலம் முதலியவைகளைத் திருக்கரங்களில் கொண்டவருமாகத் திகழ்பவர் கஜயுத்தமூர்த்தி .

திருவவதார விளக்கம்: யானை வடிவுடைய கயாசுரன் என்பவனைத் தம் திருக்கர நகத்தால் பிளந்து தோலை உரித்துத் தாம்போர்த்தி அருளிய கோலமே ''கஜயுத்தமூர்த்தி'' ஆகும்.

வழிபாட்டுப்பயன் : பகைமை நீங்கும்.

12. ஸ்ரீ தட்ச யக்ஞ ஹதமூர்த்தி



12. ஸ்ரீ தட்ச யக்ஞ ஹதமூர்த்தி

திருவுருவவிளக்கம்: கங்கையைத் தலையில் தரித்தும் உடுக்கை, மான் இவைகளை இருகரத்தில் ஏந்தியும், ஒரு கரத்தில் வாள் கொண்டும், ஒரு கரத்தால் தட்சனின் சிகையைப் பிடித்தபடியும், மிகுந்த சினத்துடனும் திகழ்பவர் "தட்ச யக்ஞ ஹதமூர்த்தி".

திருவவதாரவிளக்கம்: தேவர்களைக் காக்கும் பொருட்டும் தக்கனது யாகத்தைச் சிதைக்கும் பொருட்டும் சிவபெருமானின் திருச்சடையில் இருந்து அவதரித்தவர் "தட்ச யக்ஞ ஹதமூர்த்தி" ஆவார்.

வழிபாட்டுப்பயன்: ஆணவம் அழியும்.

13. ஸ்ரீ விசாபகரண மூர்த்தி
(நீலகண்டர்)



13. ஸ்ரீ விசாபகரண மூர்த்தி
(நீலகண்டர்)

திருவுருவவிளக்கம்: பிரம விஷ்ணுவாதி தேவர்களைக் காக்கும் பொருட்டு விஷத்தைத் தான் உண்டு பின் மஞ்சத்தில் சயனக்கோலத்தில் அம்மை உடனிருக்க அனைவருக்கும் அபயம் அளிக்கின்றவகையில் தனது வலக்கரத்தை அபயஹஸ்தமாகக் கொண்டு திகழ்பவரே விசாபகரணர் என்ற நீலகண்டர்.

திருவவதாரவிளக்கம்: சிவபெருமானின் கட்டளை இன்றித் திருப்பாற்கடலைக் கடைந்தபோது, கயிறாகிய வாசுகி எனும் பாம்பின் ஆயிரம் வாய்களினின்றும் கக்கிய விஷத்தைத் தேவர்கள் வேண்டச்சிவபெருமான் திருவமுது செய்து தேவர்களைக் காத்தபோது மேற்கொண்ட கோலமே "விசாபகரணர்" என்ற நீலகண்டர்.

வழிபாட்டுப்பயன்: விஷபயம் நீங்கும். ஆயுள் விருத்தி ஆகும்.

14. ஸ்ரீ அர்த்த நாரீஸ்வரர்



14. ஸ்ரீ அர்த்த நாரீஸ்வரர்

திருவுருவவிளக்கம்: அம்மையும் அப்பனுமாக ஓர் உருவத்திலே காட்சி அளிப்பவர், வலது பாகத்தில் சந்திரன்-கங்கையைச் சிரசில் கொண்டும் வலது திருக்கரத்தில் உடுக்கையை ஏந்தியும் புலித்தோலாடை உடுத்தியும் அபயகரத்துடனும், வலது திருவடி கொஞ்சம் வளைந்தும் உள்ளவராகவும் இடது பாகம் பச்சை நிறம் கொண்டவராகவும் உத் பலம் ஒரு கரத்திலும் வரதம் ஒரு கரமுமாக ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவராகவும் திகழ்பவர் "அர்த்தநாரீஸ்வரர்".

திருவவதாரவிளக்கம் : பிருங்கி முனிவர் மோட்ச காமியாய்ச் சக்தியைவிட்டுச் சிவமூர்த்தியைத் தரிசித்து நீங்குகையில் உமாதேவியார் இவரிடம் தமது கூறாகிய உதிரமாமிசங்களை வற்றச் செய்தனர். முனிவர் நடக்க வலியற்றுச் சிவமூர்த்தியை வேண்டச் சிவமூர்த்தி ஒரு கோலும் காலும் தந்து அநுக்கிரகித்தனர். இதனால் பிராட்டியார் தவஞ்செய்து பக்தர் வழிபாடு தனக்கு முரிமை பெற்று அர்த்த பாகத்திற்கலந்து "அர்த்த நாரீஸ்வரர்" எனப் பெற்றனர்.

வழிபாட்டுப்பயன் : பெண்கள் போகத்தில் மிக மோகம் விளைப்பர்.

15. ஸ்ரீ கிராத மூர்த்தி



15. ஸ்ரீ கிராத மூர்த்தி

திருவுருவவிளக்கம்: இருகரங்களிலும் வில், அம்பு கொண்டு வேட்டுவ வடிவில் உமையம்மை வேட்டுவிச்சியாய் உடன் வரத் திகழ்பவர் "கிராத மூர்த்தி".

திருவவதாரவிளக்கம்: பாசுபதத்தின் பொருட்டு அருச்சுனன் தவம் செய்கையில் துரியோதனனால் ஏவப்பட்ட பன்றியுருக் கொண்ட மூகதானவனென்னும் அரக்கன் தவத்துக்கு இடையூறு செய்ய அவனைக் கொல்லச் செல்லுகையில் வேடராக வந்தெதிர்த்த சிவமூர்த்தியைப் பழித்து அவரால் துன்பமடைந்து வருந்தியபோது சிவமூர்த்தி அருச்சுனனுக்குக் காட்சி அளித்த கோலமே "கிராதமூர்த்தி" ஆகும்.

வழிபாட்டுப்பயன்: பிறரால் வரும் துன்பம் நீங்கும்.

16. ஸ்ரீ கங்காளமூர்த்தி



16. ஸ்ரீ கங்காளமூர்த்தி

திருவுருவவிளக்கம்: சிவந்த நிறம், புன்சிரிப்பு, கங்கையைத் தாங்கிய மகுடம், வலது மேற்கரத்தில் மழு, கீழ்க்கரத்தில் தண்டம், இடது மேற்கரத்தில் மான், கீழ்க்கரத்தில் உடுக்கை இடது தோளின் மேல் வீணை உடையவராகத் திகழ்பவர் கங்காளர்.

திருவவதாரவிளக்கம்: வாமனாவதாரத்தில் விஷ்ணுமூர்த்தியின் முதுகெலும்பாகிய கங்காளத்தை வீணாதண்டமாக்கிக் "கங்காளர்" எனத்திருநாமம் அடைந்தவர்.

வழிபாட்டுப்பயன் : உலகம் முழுவதும் ஏவல் கேட்ப வைராக்கியத்தைப் பெறுவர்.

17. ஸ்ரீ சண்டேசானுக்கிரகமூர்த்தி



17. ஸ்ரீ சண்டேசானுக்கிரகமூர்த்தி

திருவுருவவிளக்கம்: ரிஷபவாகனத்தில் உமையம்மை அருகில் நிற்கச் சிவமூர்த்தி சண்டேசுவரருக்குத் தனது வலது கரத்தை அவர் சிரசின் மீது வைத்து அனுக்கிரகம் செய்கின்றவராகத் திகழ்பவர் "சண்டேசானுக்கிரகர்".

திருவவதாரவிளக்கம்: சிவபெருமானை வழிபடுவதே செய்யத்தக்கது என முற்பிறவிகளில் செய்த புண்ணியத்தால் அறிந்த விசாரசருமரே பின் சிவபெருமானால் சண்டேசர் எனும் பேறு பெற்றார். தன் தந்தை என்றும் பாராது பெருமானுக்கு அபிஷேகத்துக்கு வைத்திருந்த பாற்குடங்களைக் காலால் தள்ளிய எச்சதத்தனை விசாரசருமர் தண்டித்ததைக் கண்ட சிவமூர்த்தி விசாரசருமரின் சிவபக்தியையும் அவர் தம்மிடம் கொண்டுள்ள அன்பையும் நினைந்து உமாதேவியுடன் தரிசனம் தந்து அவரைப் பரிசித்து "உமக்குத் தொண்டர்க்கு நாயகமாம் பரிசு தந்தோம்" என அருளிய போது கொண்ட கோலமே "சண்டேசானுக்கிரக மூர்த்தி".

வழிபாட்டுப்பயன்: சிவனடியே சிந்திக்கும் ஞானம் அருளுவார்.

18. ஸ்ரீ பைரவர்



18. ஸ்ரீ பைரவர்

திருவுருவவிளக்கம்: விரிந்த சடை, சந்திரன் கங்கையை அணிந்தவர். கரங்களில் உடுக்கை, சூலம், சர்ப்பம், கபாலம் கொண்டு வேதஞானியை (நாய்) ஆரோகணித்துத் திகழ்பவர் "பைரவமூர்த்தி".

திருவவதாரவிளக்கம்: சிவமூர்த்தியிடமிருந்து எட்டு உருக்கொண்டு வெளிப்பட்டவர். செருக்குக் கொண்ட பிரமனது நடுத்தலையைக் கிள்ளி எறிந்தவர். சிவமூர்த்தியின் கட்டளைப்படி சர்வசம்மாரகாலத்து வேதஞானியை (நாய்) ஆரோகணித்து உலகங்களைத் தமது நெற்றி விழியால் தீயாக்கி உலவுவர். இவரே "பைரவமூர்த்தி" ஆவார்.

வழிபாட்டுப்பயன் : வாழ்நாள் முழுவதும் ஆசையை வென்று வாழ்வார்கள்.

19. ஸ்ரீ சக்ரதானமூர்த்தி



19. ஸ்ரீ சக்ரதானமூர்த்தி

திருவுருவவிளக்கம்: ரிஷபவாகனத்தில் உமையம்மையோடு எழுந்தருளியிருந்து திருமாலுக்குச் சக்கரப்பேறு அளித்த மூர்த்தமாகத் திகழ்பவர் "சக்கரதானமூர்த்தி". இவர் ஜடாமுடியில் கங்கையை அணிந்துள்ளார். நாற்கரங்களைக் கொண்டவர். உடுக்கை, மான், வரதஹஸ்தத்துடன் கூடியவர். ஒரு கரம் திருமாலுக்குச் சக்கரத்தை வழங்குகிறது.

திருவவதார விளக்கம்: திருமால் 1000 தாமரை கொண்டு திரு வீழிமிழலை என்னும் தலத்தில் சிவமூர்த்தியைப் பூசிக்கையில் அம்மலரில் ஒன்று குறையத் தமது கண்ணைப்பிடுங்கி அர்ச்சித்ததனால் பெருமான் களிப்படைந்து திருமாலுக்குத் தாமரைக் கண்ணன் எனத் திருநாமமும் இஷ்டசித்தியும் சக்கரப்பேறும் அருளினார். இக்கோலமே "சக்கரதானமூர்த்தி".

வழிப்பாட்டுப்பயன்: நலம்பல பெறலாம்.

20. ஸ்ரீ கஜமுகானுக்கிரகமூர்த்தி




20. ஸ்ரீ கஜமுகானுக்கிரகமூர்த்தி

திருவுருவவிளக்கம்: ரிஷபவாகனத்தில் அம்மையுடன் தனது இடது தொடையின் மேல் விநாயகப் பெருமானை அமர்த்தி வைத்துக் கொண்டு அருளுகின்றவராகத் திகழ்பவர் "ஸ்ரீ கஜமுகானுக்கிரகமூர்த்தி".

திருவவதாரவிளக்கம்: கயமுகாசுரனை வெல்ல ஒரு புத்திரனையளிக்க வேண்டுமென்று தேவராஜன் வேண்ட விநாயகமூர்த்தியைத் தோற்றுவித்து அவருக்குத் தேவர்களுக்கும் பூதகணங்களுக்கும் ஏனையோருக்கும் தலைவனாக விளங்கும் தன்மையையும் விக்கினங்களைப் போக்கிக் காக்கும் தன்மையையும் அருளும் திருக்கோலமே "கஜமுகானுக்கிரகமூர்த்தி" ஆகும்.

வழிபாட்டுப்பயன்: இடையூறுகள் அகலும்.

21. ஸ்ரீ சோமாஸ்கந்தர்



21. ஸ்ரீ சோமாஸ்கந்தர்

திருவுருவவிளக்கம்: கங்கையையும் சந்திரனையும் அணிந்தும், நாற்கரங்களில் உடுக்கை, அபயம், மான், வரதம் கொண்டும் சர்வ அலங்கார பூஷிதராக உமையம்மை இடப்பாகத்தில் அமர்ந்திருக்க நடுவில் ஸ்கந்தர் நின்ற வடிவத்தில் விளங்க அருள் பாலிப்பவர் 'சோமாஸ்கந்தர்" .

திருவவதாரவிளக்கம்: சூரபதுமன் முதலான அசுரர்களைச் சங்கரிக்க வேண்டிச்சிவமூர்த்தி தம் நெற்றிக் கண்ணிலிருந்து தோற்றுவித்தார் முருகப்பெருமானை. அப்பெருமானை அம்பிகை அள்ளி அணைத்து எடுத்துச் சிவமூர்த்தியிடம் தரப் பெருமான் இடபவாகனத்தில் தனக்கும் அம்மைக்கும் இடையில் அமர்த்தி அருள் பாலிக்கும் திருக்கோலமே "சோமாஸ்கந்தமூர்த்தி" ஆகும்.

வழிப்பாட்டுப்பயன்: நற்புத்திரப்பேறும் சந்தான விருத்தியும் சித்திக்கும்.

22. ஸ்ரீ ஏகபாதமூர்த்தி



22. ஸ்ரீ ஏகபாதமூர்த்தி

திருவுருவவிளக்கம்: சந்திரனையும் கங்கையையும் தலையில் கொண்டவரும் நாற்கரங்கள் கொண்டவரும் முக்கண்ணரும் புலித்தோலாடை உடுத்தியவரும் ஏகபாதத்தை உடையவருமாகத் திகழ்பவர் "ஏகபாதமூர்த்தி".

திருவவதாரவிளக்கம்: சிவமூர்த்தி பிரம விட்டுணுக்களை முன்னே தந்து அவர்களை அதிட்டித்து நின்று முத்தொழில்களைச் செய்து யுக முடிவில் பிரம விட்டுணுக்களைத் தம்முள் ஒடுக்கித் தாம் முன் போலவே ஏகமாய் இருப்பார். இவ்வாறு மும்மூர்த்திகளையும் தம்முள் ஒடுக்கி ஏகராய் நின்ற திருக்கோலமே "ஏகபாதமூர்த்தி" ஆகும்.

வழிப்பாட்டுப்பயன் : ஞானபாதத்தினை அனுஷ்டிக்கச் செய்யும்.

23. ஸ்ரீ சுகாசனமூர்த்தி



23. ஸ்ரீ சுகாசனமூர்த்தி

திருவுருவவிளக்கம்: சாந்தமாயும், முக்கண்ணுடன் ஆறு திருக்கரங்களில் தண்டம், சர்ப்பம், மழு, மான் அபய வரதங்களைக் கொண்டும், இடது காலை மடித்தும் வலது காலைப் பூதத்தின் மீது வைத்துக் கொண்டும், இடது பாகத்தில் பார்வதி தேவியோடும் இருந்து அருளுகின்றவர் "சுகாசனமூர்த்தி".

திருவவதார விளக்கம்: திருக்கயிலையில் அம்பிகை வேத சிவாகமங்களின் உண்மையை உணர்த்தியருள வேண்டட இறைவன் சுகாசனராக எழுந்தருளி இருந்து அன்னைக்கு உபதேசம் செய்யும் திருக்கோலமே "சுகாசனமூர்த்தி" ஆகும்.

வழிப்பாட்டுப் பயன்: மும்மல நீக்கம் பெறுவர்.

24. ஸ்ரீ இலிங்கோத்பவமூர்த்தி



24. ஸ்ரீ இலிங்கோத்பவமூர்த்தி

திருவுருவவிளக்கம்: சந்திரசேகரமூர்த்தியின் அம்சமாக விளங்குபவர் இலிங்கோத்பவர். சந்திர கலையுடன் கூடிய மகுடத்தைச் சிரசில் தரித்திருப்பவர். நான்கு கரங்களில் 2 கைகள் அபயவரதஹஸ்தமாகவும் மற்ற இரண்டு கைகளில் மானையும் மழுவையும் ஏந்தியும் விளங்குபவர். பெருமானின் திருவடியையும் திருமுடியையும் காணத் திருமாலும் பிரமனும் முறையே வராகமாகவும் அன்னப்பறவையாகவும் உருக் கொண்ட கோலத்தில் அருகே இருக்கின்றனர்.

திருவவதாரவிளக்கம்: பிரமவிஷ்ணுக்களின் செருக்கை அகற்றி அவர்கட்கு மீண்டும் படைத்தல் காத்தல் தொழில்களை அருளிக்காட்சி அளித்த கோலமே "இலிங்கோத்பவமூர்த்தி" ஆகும்.

வழிப்பாட்டுப்பயன்: மனஅமைதி பெறுவர்.

25. ஸ்ரீ தட்சிணாமூர்த்தி



25. ஸ்ரீ தட்சிணாமூர்த்தி

திருவுருவவிளக்கம்: வலது திருவடியால் முயலகனை மிதித்துக் கொண்டும் இடது திருவடியை மடித்து வலது முழங்காலின்மேல் வைத்துக் கொண்டும் தம் திருவடி சமீபம் அமர்ந்திருக்கின்ற சனகாதி முனிவர்களுக்கு வேதாகமங்களின் உண்மைகளை விளக்கியும் தம் நான்கு திருக்கரங்களில் மழு, அக்னி, ஜெபமாலையுடன் கூடிய சின்முத்திரை, ஆகமச்சுவடி ஆகியவற்றைக் கொண்டும் திகழ்பவரே "தட்சிணாமூர்த்தி".

திருவவதார விளக்கம்: பிரமபுத்திரர்களாகிய சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகிய நால்வருக்கும் சின்முத்திரையால் பதி பசு பாசம் ஆகிய முப்பொருள்களின் இயல்புகளையும் பசு பாசத்தின் நீங்கிப் பதியை அடைதலே முத்தி என்பதையும் உணர்த்தும் திருக்கோலமே "தட்சிணாமூர்த்தி".

வழிப்பாட்டுப்பயன்: பிறவித்துன்பம் நீங்கி மோட்சம் அடைவர்.

நலமே தழைக.

உ
சிவமயம்
ஸ்ரீ மங்கை பாகர் துணை

மங்கல வாழ்த்து

செந்திருவைச் சேரலாம் செந்தமிழைப் பாடலாம்
இந்திரனைப் போல்வாழ்ந் திருக்கலாம் - மந்திரஞ்சேர்
வெற்பகத்தை யூடறுத்த வேலவர்க்கு முன்பிறந்த
கற்பகத்தைக் கைதொழுதக் கால்.

வெள்ளைக் கலையுடுத்தி வெள்ளைப் பணி பூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியா சனத்தில் அரசரோ டென்னைச்
சரியா சனம்வைத்த தாய்.

இதுவே கயிலாயம் இம்மலையே மேருகிரி
இதுவே கொடுங்குன்றத் தெல்கை - இதுவே தான்
செல்வமங்கை பாகர் திருவைக் குழலணிந்த
நல்ல மங்கை பாகர் நகர்.

திங்களணி நல்லமங்கை பாகர் காக்க;
சிவகுருவாம் பாண்டி நாட்டாசான் காக்க;
தங்க நிகர் அரிவை நகர் தழைக்க வந்த
குரு மொழி சொல் தவறாத குணசீலன்
பொங்கு புகழ்க்கல் வாசநாடு பூதமங்கலம் நாடுடையான்
இரகுநாதன் மா தவத்தால் வந்த
சற்குணவான் கணேஷ் மணத்தின் மீதே
செங்கமலத் தாமரை மேல் வீற்றிருக்கும்
நல்ல மங்கை தென்றல் விசாலாட்சி எனும்
தங்கநிகர் மண மகளை வதுவை சூட்டி
நற்பேறு பதினாறும் பெற்று வாழ்க மாதோ.

கதிரோனும் திங்களும் காசினியோர் உள்ள காலமெல்லாம்
சதுராக வாழ்ந்து தழைத்திடுவீர் இத்தாரணியில்
மதுரா புரிச்சொக்கர் மீனாட்சி அம்பிகை வரமது பெற்றுப்பேறு
பதினாறும்பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்து பெருகுவீரே.



சிவநெறித் தொண்டர் S.இரகுநாதன்
சிவநெறிச் செல்வி. R.உமாதேவி

விஜயா பிரிண்டர்ஸ், மதுரை-1. ✆ 2343829